1996 ஆகஸ்ட் 7]

சிவப்பு விளக்குப் பகுதியிலிருந்து தமிழகப் பெண்களை மீட்க ஒரு தனி போலீஸ் படை அமைத்து அவர்களைத் தமிழகத்திற்கு கொண்டு வந்து புனர் வாழ்வு அளிக்க அரசு முனையுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குண பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கலைஞர் ஆட்சி 1989 ஆம் ஆண்டு நடைபெற்ற நேரத்தில் இதுபோன்ற ஒரு தகவல் தமிழக அரசுக்கு தரப்பட்டது. அப்போது தமிழக அரசு அதை முன்னின்று அதற்குரிய துறையின் மூலமாக அங்கிருந்த பாதிப்புக்கு உள்ளான தமிழகப் பெண்களை மீட்டு வரச் செய்து, அவர்கள் வேறு தொழில் செய்ய விரும்பிய பட்சத்தில் அவர்களுக்கு நிதி உதவி அளித்திருக்கிறது. எனவே, இப்போது உறுப்பினர் தந்த தகவலை ஏற்றுக்கொண்டு உரிய துறையின் மூலமாக விசாரணை நடத்தி அவர்களை மீட்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றது.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை குறித்து

திரு. சி. வேலாயுதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். நேற்று ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். இன்று அது வரவில்லை, ஏன் என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என் அறையில் வந்து கேட்க வேண்டும்.